உ

ஹரி: ஓம்.

ஸ்ரீபரமசற்குருவேநம:

நன்னிலத்தின்கண்ணெழுந்தருளிய

# ஸ்ரீ தாண்டவமூர்த்தி சுவாமிகள்

# திருவவதாரவைபவம்.

உண்மைநிலையுணர்ந்த பெரியாரால்

அருளிச்செய்த

# திருப்பாசுரங்கள்

திரிசிரபுரம்:

ஜெகம் அண்டு கோ., டாட்ஸன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கலுற்றது.

1929

முத்தமிழ்ப்பண்ணை
05.10.87

உ

ஹரி : ஓம்.

ஸ்ரீபரமசற்குருவேநம:

நன்னிலத்தின்கண்ணெழுந்தளி
ஸ்ரீவேதவேதாந்தமஹாவாக்கியப்பொருளாகிய
கைவல்ய நவநீதத்தைத் திருவாய்மலர்ந்தருளிய

## ஸ்ரீ தாண்டவமூர்த்தி சுவாமிகள்

# திருவவதாரவைபவம்.

உண்மைநிலையுணர்ந்த பெரியாரால்
அருளிச்செய்த

## திருப்பாசுரங்கள்

இது

கோஷ்டிப்பிரதேச தெரிசனப்பிரவர்த்தக
சமூகசம்பந்தர்கள் நியமன வாக்கியப்படி

பெருவளப்பூர்
மு. பெ. அருணசலரெட்டியாரால்

திருசிரபுரம் :
ஜெகம் அண்டு கோ., டாட்ஸன் அச்சாபீஸில்
பதிப்பிக்கலுற்றது.

1929

" முத்தமிழ்ப்பண்ணை "
வைரி செட்டிப்பாளையம்.
திருச்சி மாவட்டம்.

ஹரி : ஓம்.
ஸ்ரீபரமசற்குருவேநம :



## தாண்டவமூர்த்தி சுவாமிகள்

# திருவவதாரவைபவம்.

### காப்பு

திங்களணிவேணிச் சிவமம்பிகையினருட்
பொங்குமதவாரணத்தின் பொன்னடியைக் கங்குல்வினை
போக்குமருண்ஞானப் புணரிரவிதாண்டவன்சீர்
நாக்கழற வஞ்சலிப்போம் நாம் க.

வேணிநாதனு மின்பயி லம்படைப்
பாணிநாதனும் பங்கய வெண்மலர்
வாணிநாதனும் வந்து வணங்குறக்
காணுநாதன் கழல்தொழு வாமரோ உ.

திங்கள்சூடியு மாகித் திகிரியுஞ்
சங்கமேந்தியு மாகிச் சதுமறைப்
புங்கனுகிப்பொலியு மரும்பொருட்
பங்கயப்பத மேத்திப் பணிகுவாம் ௩.

சாக்கிர சொப்பன சுழுத்தி தன்னினுஞ்
சாக்கியா யவற்றினிற் றளைப்பு ணுததாய்
நீக்கரும் பூரண நிலையதாஞ் சிவ
பாக்கியத் திருபதம் பரவுவா மரோ. ௪.

ஹரி : ஓம்.

ஸ்ரீபரமசற்குருவேநம :

## தாண்டவமூர்த்தி சுவாமிகள்

# திருவவதாரவைபவம்.

---

திருக்கிளர் சிவலோ கத்தினை நிகர்க்குந் தேவர்கள் முனி
வர்கள் பரவும், மருக்கமழ் சோலை நன்னில நகரில் மறைய
வர் குலத்தில் வந்துதித்துத், தருக்கொழிந் தருள்சேர்
தாண்டவ மூர்த்தி தரணியில் வருந்திற முறைப்ப, அருட்
குருவுபய பங்கய மலர்த்தா ளனுதினம் வணங்கிவாழ்த்
திடுவாம். க.

ஆதிமத்தியாந்த ரகிதமாம்பழைய வரும்பொரு ளுணர்ந்
துல குய்ய, வேதியர்மரபி லவதரித்தொருநால் வேதத்தின்
முடிவில் வீற்றிருக்கும், ஓதரும் பொருளோ ருருவெடுத்
தெவரும் முணர்ந்திடத் தாண்டவ னெனும்பேர், ஆதியிற்
புனைந்தோர் நூலுரை செய்த தரும்பொரு ளுரைகைவல்
லியமே. உ.

செய்தகை வல்யக் கருத்தைமுன் னோர்கள் சேயவர் சேய
வர் சேய்கட்க், கையனா லுணர்த்தப் பரம்பரையாக அடியடி
வழிவழிகேட்டு, ஐயமுந்திரிபு மகன்றுபேரின்பத் தமர்ந்து
வாழ்வுற்றன ரவர்போல், நையுமிவ்வுயிர்க ளூழிநீடூழி நற்
பதத்துற்றுவாழுகவே. ங.

நன்னிலத்தேக நாயகனேக நாயகி நாண்மல ருபய.
பொன்னடி மறவாத் தத்துவானந்தர் பொற்கொடி சற்குண
வதியாள், தன்னகட்டுதித்த தாண்டவமூர்த்தி சற்குரு
நாரண னருளாற், சொன்னகை வல்ய வமுதினால்விடய
சோகைநோய் தவிர்த்திடத் தருமால். ச.

தந்தைதாய் குருவுந் தெய்வமா நமது தாண்டவேசன் சொல் கைவல்யஞ், சிந்தையுட் கொண்டன் போடுசற் குருவாற் சிரவணுதிகள் புரிவாரேல், எந்தனோர்மந்தர் வலியபாதகரு மிருமபினோர் பரிசனவேதி, தந்ததேயென் னச்சாந்தவர்தமையுந் தன்மயமாக்கிடுந் தானே. ரு.

அந்தமொன்றில்லா வருட்பெருங்கடலா மாரியனரு ளினுலறைந்த, பந்தமதகற்றும் ஞானகைவல்யம் பகர்ந்த தாண்டவ வருண்மூர்த்தி, நந்தினந்தவழும் நன்னிலநகரி னுன்மறையவர்குல மரபில், வந்தவதரித்த பெருமையென் புன்சொல் வாக்கினுலுரைசெய வசமோ. சு.

அன்னையும்பிதாவுங் குருவுமென்றெய்வ மாகியென்னகத் திரு ளகற்றற், கென்னுளங்குடிகொண் டிருந்தவெம்பெரு மா னிணையில்தாண்டவ வருண்மூர்த்தி, தன்னவதாரச் சரி தமென்னுவாற் சாற்றுதற்கரியதென் றறிந்தும், என்னவா வெனது மட்டுமில்லாது யெடுத்தியம்பினதிது வாமால். எ.

நன்னூலாதிய பன்னூலிலக்கணத்தை நவைதீர வுணர்ந் துரைமேலோர்க டம்முன், என்னூலு மறியாதே னுரைத்த புன்சொல் லிதனுலென் மடமையும் வாய்மதற்புங் காண்க. பன்னூலின் சாரமெலாந் திரட்டிஞானம் பகுந்துரைகை வல்யநவ நீதமென்னுந், தொன்னூல்செய் திடுந்தாண்ட வேசன்மண்மேற் றோன்றியவா றுரைசெய்த சொல்லி னுலே. அ.

பிரணவத்துருவாம் பேரருட்பொலிவே பிரமஞானக் குருவுருவாய்,பரமுலகுயிராய்ப் பரவியுமீசன் பஞ்சகிர்த்திய .முயிர்ப் பொருட்டாய், தருமுயர்சத்தி தன்னொடுங்கைலைத் தடங்கிரியாதிய வுலகத், தருடருமூர்த்தி யாயமர்ந்தவரி லழகுறு கைலையங்கிரியே. கூ.

கலைநிறைமதியே மதியெனப்பெரியோர் கழறுவரதுமக மேருச், சிலையவனடியர் மதியினையாளு சுஷீரணவடுவலை வுடைத்தேதன், தலைவர்தாழ் பவர்தாழ் பவர்தலைமையராச் சாற்றல்பொய் யலவெனத்திரண்டு, மலையுருவாகி முடிமிசை தரிக்கு மாறுவின் வளர்ந்தவொண் மதியோ. ம.

செய்யமாமலரோன் சிருஷ்டிகாலத்துச் சிறந்ததன் றிரு வுளத் தெண்ணி, வையகத்தவர்க ணினைந்துயீடேறு மார்க்க மாய்ச் சமைந்ததோ மாசில், மெய்யறிவாளர் தவமெலாந் திரண்டு விளங்கலோ வேதன்மா லமரர், தெய்வநான்மறை யின் வடிவமோஞானத் திருவருளுருவமோ தெளியின். கக.

என்னமேலோங்கி வளர்வுறுங்கைலை யெழிற்கிரிச் சிவபுர மதனில், பொன்மணி நிறைந்த மாளிகைவீதிப் புங்கவர் சூழ்வுற நடுவில், முன்னவனமரு மாலயமண்ட முகடுற வளர்ந்து நாற்புரமும், பன்மணியிழைத்த கோபுரங்கோடி பகலவனுதித்ததோ வென்ன. கஉ.

நாற்புறமதிலு மிந்திரநீல நன்னிலைக்கதவு மந்திரம்போற் காற்கணியாகக் கடைந்ததூண்வைரங் காந்திசேர்மதலை மாணிக்கம், ஏற்பசெம்பவளப் போதிகைமரகதத் தெண் ணறு முத்தரம் பரப்பி, மேற்புரஞ் சந்திர காந்தநற் றகட் டால் மேய்ந்தமண் டபமுமொன் றுளதால். கங.

தெண்டிரை கொழிக்கும் வானதித் தடத்திற் றேவர்கள் முனிவர்கள் மடவார், மண்டிநீராடி யரகரவென்று வணங்கு வோர் வருதல்போ தலினால், பண்டைநாட் டிறந்த கதவி னைக் கபாட பந்தனஞ் செய்வதே யின்று, விண்டல மளக் குங் கோபுரவாயல் மிகுகட லேலெழாலி யடங்கும். கச.

பற்பலகோ புரங்கள் சூழ்ந்திலங்கும் பரமன்வா ழாலய நடுவில், சிற்பனு லமைத்த நவமணிச் சிம்மா தனந்திகழ் சபையுமொன் றுளதால், தற்பர முணர்ந்தோர் சார்ந்திடு மிடஞ் சாயுச்சியச் சிவகதி யாகிக், கற்பகாலத்து மழிவில் வீடாயுங்கடைப்பிடி யென்பது மதுவே. கரு.

எண்ணரி யிருந்தெண் புறத்தினும் வருந்தி யிருவிழி பிதுங்கிடத் தாங்கி, விண்ணள வுயர்ந்து நவமணிப் படிகள் விளங்கிட வமரர்கள் சூழக், கண்ணகன் மலர்மேடையி னரியணையிற் கனநவ மணிகள் கோர்வை யினால், வண்ண மேல் விதானம் விரித்தெழில் வாசமாலையும் வயங்கிடத் தூக்கி. கசு.

இச்சிறப்புடைய கைலயங்கிரியி னெம்பிரா னெழிலரி யணைமேல், பச்சைமென் றோகைப் பசுங்கொடி யுமையோர் பாகமா மிடப்புறத் தொளிர, கச்சணிக் கொங்கைக் கடவு ளர் மகளீர் கவரிகொண் டெதிர்பணி மாற, அச்சிவ கணங் கள் சந்தனமுதல வகினறும் புகைகள்முன் காட்ட. கஎ.

தும்பிமா முகனுந் தோகைமீதூருந் துணைவனுஞ் சொல்வழி நடப்பத், தம்பிரான் றனது வுக்கிரத் தெழுந்து தக்கன்மா மகஞ்சிதைத் துயர்ந்த, எம்பிரா னெமக்கெப் பணியெனத் தொழுது யிருகைவாய் புதைத்தரு கிருப்ப, கும்பிபாகத்துக் கிறையவன் படரின் குழுவினே டிருந்தவ ணிறைஞ்ச. கஅ.

அண்டர்கள் திரண்டு கரஞ்சிரங் குவிப்ப அருந்தவர் முனிவர்வாழ்த் தெடுப்ப, விண்டயன்றுள மத்தளம்போட விண்ணவன் சுதியினிற் கூட்ட, பண்டுதும் புருநா ரதரிசை மீட்டப் பாணனுங் குடமுழா வதிர்ப்ப,அண்டையி லரம்பை யுருவசி மேனை யாருடன் றிலோத்தமை யாட. கக.

சந்நிதி யொதுங்கப் பன்முறை யுரைத்துந் தாங்கள்பின் பொதுங்குறு மையினால், தன்னது கையின் மணிப்பிரம் பதனாற் றுக்கிட மணிமுடி தகர்ந்து, பொன்னவிர் மணிப் பூண் சிதைந்து மெய்பதைப்ப போற்றிகை யேற்றுப்பின் பொதுங்க, என்னிரு வினையைத் தடுத்தரு டருநந் தீசனங் கிடையினின் றுலவ. உ0.

இத்தகை யுடைய கைலையங் கிரியி னெம்பிரா னுமை யவட் கிசைப்பான், பத்தியுஞ் சித்தி முத்தியுமருளும் பகரு நான்மறையு நான்மறையிற், றத்துவமசியாற் சச்சிதா னந்தத் தடையிலானந்த தற்பதமாந், தத்துவமாகு மெம துருவடைதல் தலைமையாமெவற்றினு மென்றே. உக.

ஆதியிலாதிக் காதியோனுரைத்த வரும்பொருளாங்கு ளோர் கேட்டுத், தீதிலாவீட்டின் றிறமையீதென்னச் செங் கையினெல்லியங் கனிபோல், ஓதினாதனைத் தமிழினு லுரைத்தா னுளந்தெளிந் துலகுளோ ருய்யப், பாதிமா யனுக்கு முமைக்குமாய்த் தன்னைப் பாகமாக்கினனரு ளாலும். உஉ.

திருவணைச்செல்வ னருளினும்ஞானத் தினகரனெனவு மொப்பில்லா, ஒருமகவாக வுதித்துநால்வேதத் துட்பொரு ளுணர்ந்துல குய்ய, கருணையா லுயர்கை வல்லியநூலைக் கழறியதாண்டவ மூர்த்தி, பெருநிலமதனி லவதரித்திடமப் பேற்றினையறிந்தவா றிசைப்பாம். உரு.

பொன்னிலத்தழகுஞ் செல்வமுமளகைப் பொருவையுந் திருவையுங் கவர்ந்து, என்னிலத்ததினு நன்னிலத்தேக நாயகனேக நாயகியார், பொன்னடிக் கமலப் பூசனை புரியும் புரந்தரன் மாலய னமரர், மன்னிநீங் காமல் வரம்பெறு மகிமை வளந்திகழ் நன்னில நகரே. உச.

பொன்றிகழ் மார்பர்க் கினியபார்மடந்தைப் பொருவி னுண்மருங்கினுக் கிசைந்த, தென்னவம் மணியி னினங் கொழித்தொளிரு மெழுகடற் கலையென வுடுத்த, கன்னிதன் மார்பிற் கணிமதாணியெனக் காணுற விளங்கு நன்னிலமாம், அன்னிலத் தெணிலந் தணருளார் பெருமை யாருரை செய்திடவல்லார். உரு.

அன்னகருரையு மந்தணரொருவ னரியதன்மரபினின் றகலா, தென்னிலத்ததிக மாகியஞான வெழுபுவிவழிநடந் ததீத, நன்னிலத்துரிய யேகநாயகன்ற ளுண்மலர்ப் பதமற வாது, தன்னிகரின்றி விளங்கிடும்பொருவில் சதுமறைத் திருவுடை யவனே. உசு.

அவனியோர் வானோ ரனைவரும் பரவு மருட்பெருஞ் செல்வனன் னனந்த, தவமெலாந் திரண்ட வடிவின னவன் பேர் தத்துவானந்தனு மவர்க்குத், தவ்ரில்கற் புடைய மனை யவளறிய சற்குணவதிப்பெய ரினையர், புவனியிலெவரும் வணங்குதற்குரிய புண்ணியத்திருவுரு வமைந்தோர். உஎ.

தவத்தினில் வசிஷ்ட னருந்ததியெழிலிற் சானகிராமனே யனைய, அவர்க்கிணை யில்லா வழகையஞ் செல்வத் தரியநற் றிருவினை யுடையர், பவத்தெரி தணிக்கும் ஞானவாரிதியிற் படிந்தக முடனுயி ரெனவும், உவப்புருமதனு மிரதியு மென்ன வுள்ளமொற் றினிதுவாழ்ந் தனரே. உஅ.

திருவருள்சிறந்த தத்துவாநந்தன் செழுமறையவர்க் கெலாஞ் சிறந்தும், ஒருமைமெஞ்ஞான நிஷ்டைவேதாங்க முபநிடமாக மாதிகளின், வருமுறைதவரா தொழுகியுஞ் சில மனையுடனில்லறம் வளர்த்தும், அருமகவில்லா வறுமை யால் மெலிந்தே யாழ்பெருந் துயர்க்கட லடைந்தே. உகூ.

எத்திறச்செல்வம் பெற்றிருந்தாலு மெங்குலமுய்ந்திடா ததனாற், புத்திரப்பேறு மிருமையும் மேலாம் புரையறு முத்தியும் பெறுமால், இத்திரமதற்கோ வெம்மிருவருக்கு மெதிர்வயோதிகமு முந்துறலால், எத்திரத்தால்நா முய்யுமா றென்றே யெண்ணமுற் றிடர்க்கட லுழன்றே. ௩௰.

மைவிழிமனையா டனைமுகம்நோக்கி மடக்கொடி கேட்டி யோர் வசனஞ், செய்தவமின்றித் தினையளவேனுந் தீமை செய்துடையமா தலினால், உய்வகையெனக்கிங் கிகபர மளிக்கு மொருமகவின்றி யுள்ளுடைந்தேன், செய்வகை யொன்று மறிந்திலேனென்ன சீரிருந்தென்பய னுமால். ௩௧.

அற்பகாலத்தி லழியுமிவ்வுடல மதற்குணன் மகவொன்று கிடைக்கிற், கற்பகநாட்டி னங்குலப்பிதிர்க்கள் கவலைதீர்ந் துளமகிழ்ந் திருப்பார், எற்பவப்பயனு மெய்துமாலிதனுக் கெச்செயல் செய்துமா றறியேன், கற்பினால் நின்னை யருந்ததி களிக்குங் கமலையிற் கட்டழ குடையாய். ௩௨

அருமகவில்லா ரந்தணருலக மடைகிலா ரெனுமறை யதனால், வரமிகுமரிய தவம்புரிந்துயர்வா மகவுபெற் றுய்ந்தன ரில்லார், குரவனால் மூத்தகொழுந்தனாற் றவத்திற் கோதறு முனிவரா லினைய, தருமசந்தான விதிமுறை பெற்றுச் சார்வரும் நற்கெதி சார்ந்தார். ௩௩.

தவமிலாரொருவர் மகவினைமகவாய்த் தாங்கிவானுல கடை குறுவார், அவனியிற்கிரி கிள்ளையைமகவா யாக்கி வீடுற்றன ரனேகர், சிவபிராற் பூசைக் குயர்பசு தென்னை சேவினாற் சேனுல கடைந்தார், புவனினிம் பாசுக்குயர் மணஞ் செய்து புன்னர ககன்றன ராமால். ௩௪.

புத்திரனில்லார் பொன்னுலகடையார் புன்னரகெய்துவ ரென்னுஞ், சத்தியவேத மிருகண்டு முதலாந் தவமுனி வோர்களுஞ் சதுர்வே, தத்தினல் லுரையுஞ் சாட்சியா மென்னச்சாற்றல்வே றுளநமைப் புரக்கும், அத்தனு மானை முகற் குகற் பெறிலென் றறைந்து மீட்டறையலுற் றனனால். ௩௫.

அதிபனில்லாநாட் டழகுமாசிரிய னருளிலா ஞானமு வேத, விதிமுறை யொழுகா விப்பிரன் றவமும் விண்மழை யின்றிய விளைவும், பதிவிரதாதர் மத்தினையிழந்த பாவைய ரெழிலும் நள்ளிருட்கு, மதிசுடரில்லா வானமுமன்றே மகவிலா வாழ்வென மதிப்பாய். ௩௬.

எனவிருவருமொற் றறம்பலவியற்றி யிறைவனற் பூசனை நியமம், மனமொழி மெய்யான் மாறுபாடின்றி வந்தனை மாதவ விரதம், இனியபல் தான மியற்றியுமின்றி யிருவினை கடப்பவர் யாரே, புனைமலர்மதுவா னனைதருங்கூந்தற் பொருப்பினே ரிருதன முடையாய். ௩௭.

என்றுதன்மனையோ டுரைத்துமீட் டொருநா ளெங்குல முழுவதும் புரக்கும், மின்பயில் பஞ்சா யுதங்கரத் தேந்தும் விண்ணவர் தேவனை வேத, மென்சிரத் தொளிரும் வேங்கட பதியின் விறைமலர்ப்பதமெரி சனையே, என்குலம் விளங் கும்படி யருள் புரியு மெனவிரு வருமன மிசைந்தே. ௩௮.

நற்றினந்தெரிந்து சக்கரதீர்த்த நளிர்புனலாடி நன்னிய மம், முற்றிலுமுடித்து யேகனுயகனை முறைவலமுமையுடன் புரிந்து, நற்றவப் பெரியோ ரியாவருங் களிப்ப நவையறத் தானமும் வழங்கி, பற்றறுமனத்தாற் பகவனல்லருளைப் பலமதாய்க் கைத்துணைபற்றி. ௩௯.

மனைவியுந்தானும் வடமலையமர்ந்த வள்ளலை யடியவர் விரும்பும், நினைவறிந் துதவும் வரதனைநகரில் நீலமேனிய நெடுமாலைக், கனிவுறப் பலகா தஞ்சிலநாளிற் கடந்து முன்னவர் பணிந் துறங்க, தனிமுதல் மூவர்க் கிறையவன் சங்கு சக்கரந் தாங்கிய கரத்தோன். சய.

உலகமுமுலகுக் குயிரையு முயிருக் குணர்வையு முணர் வினுக் குரிய, நிலைபெருவருணச் சிரமமுமதனி னின்றிடு நியமமுநியமத், தொலைவில்நற் பதப்போ கமும்பதவியினிற் சுகமுமச் சுகத்தின்வேற் றுமையும், சொலுமுயர் கலையுங் கலையின்முக்காண்டச் சுருதியும்விதித்தன முன்னம். சக.

ஆதியிலுலகம் படைத்தநாள்வேத மந்தணரன்றி மற் றுள்ள, சாதியர்தீண்டத் தகாதெனுமுறையுந் தனித்தனிக் காண்டங்கண் மூன்றும், ஓதியகருமம் பிரமம்நாமென்னு முபாசனைநாம்பர மென்னுஞ், சோதிமெஞ்ஞானம் பிரமம் நாமென்னச் சொற்ற சொற் சத்தியமாமால். சஉ.

கருவிகளியற்றுஞ் செயலெலாமெனது க்ருமமாதலி னவை முடிவிற், பரமமென்றுரைக்கும் பத்தியானின்றேற் பரனருள்முத்தியின் றென்னுங், கரியதாஞான காண்டமின் புருவக் கடல்வடிவாகு மெய்ப்பொருளாந், திரவறிவறியா விடத்தினன்முத்தி சேர்ந்திடா தென்றுரைத் திடுமால். சங.

கருமகாண்டங்கிரி யாபயனுனே கைதருவேனெனக் கழ றும், பரமகாண்டமுமுத் தேசநற்பயனைப் பகவனால் தருவ னென் றருளும், பிரமமா ஞான காண்டனன் முத்திப் பேரளிப்பேமெனு மூன்றுந், தருமெமையுணர்ந்திம் மூன் றினை யியற்றிற் றடையறுசுகத்தில் வீற்றிருத்தும். சச.

தனையுணர்ந்தவரிம் மூன்றிலொன்றியற்றிற் றனித்தனித் தன்பத மளிக்கும், தனையுணர்ந்திலரிம் மூன்றிலொன்றியற் றிற் றன்பதத்திருத்தி மீட்டகற்றும், எனையுணர்ந்தெனக் கிம் மூன்றையுமியற்றி வினையில் தற்பதத்தில் வீற் றிருத்தும், எனையுணர்ந்திலராய் மூன்றிலொன்றியற்று றெல்லையிற்பிறப் பிறப்புழல்வார். சஈ.

ஆதலாற்கருமம் பத்திமெஞ்ஞான மாகியகாண்டமூன் றினுக்கும், ஆதாரவினைதத் தொம்சிவாக்கியத்தா லறிந் ததைத்தான் றலைவனுமாய், ஓதரும்பிரம மெனவுணர்ந் திவைகளொன்றலாற் பிரிவிலையென்னும், பேதமையறுத் தோர் காண்டமுப்பேரும் பெற்றுநீடூழி வாழுவரால். சசு.

இவ்வகையுணர்வுற் றெவர்கள்வீடுறுவோ ரிவருய்யுமாறு மேலாய, செவ்வியபுனித வுபநிடதார்த்தஞ் சேர்ந்தநான் மறையின் மாவாக்கியத், திவ்வியவமுதத் திரட்சியாய் வாக்குச் செவிப்புலத் துளத்தினி தெளிதாய், பவ்வமாற் றுவதாய்ப் பொருட்பெருங்கடலாய்ப் பவித்திரநூற் பெருந்தகையாய். சஎ.

ஒருத்தனுயுலக முயிர்பரநாத மோங்குவேதம் பிறப் பிட மாய்ப், பரத்துவமாகி யதனைமுக்காண்ட பலனெலாங் கொடுத்து நிர்வாணப், பெருக்கமாந் துரியா தீதவாழ் வளிக்கும் பிரமஞானத்துரு வடிவாங், குருபிரா னருள்நூ லன்றிமெஞ்ஞானங் கூடுமோ கூடரா தெனவே. சஅ.

தாதொருங்கிளவுட் கொண்டிவன் றனக்கோர் தனையனைத் தந்தவனுலே, மாநிலத்தவர்க ளுய்யும்படிவேத வாக்கியம் நான்கினுட் சிறந்த, தானதத்தொம்சிப் பொருளினை யெளிதி லருளிறையருளினு லடையும், ஞானநூலொன்றை நல்கவென்றுளத்தில் நாட்டமுற்றருளுருக் கொண்டே சகூ.

சங்குசக்கரம்வாள் தனுவொடுதண்டந் தாங்கிடுமுவணா னுங் கிரணம், பொங்குபொன்னுடை கௌஸ்துபந்துளபம் பொருப்பினேர் சதுர்ப்புஜங் கரந்து, செங்கமலாசனி யும் பரிசனமும் க்ஷீரவாரிதியினன் னடுவில், தங்குமாமணிமண் டபங்கள் திருவேங் கடமலை தன்னையும் விடுத்தே. ருய.

ஊர்த்தபுண்டரத்தி னுதலெழின்முகமு முத்தரி யங்க வஸ்த்திரமுஞ், சேர்த்தமென்மருங்கிற் சிறந்தபட்டுடை யுஞ் செவிக்குழை முப்புரிநூலும், பார்த்தவர் வணங்கற் காசிகள்புரியும் பங்கயச் செங்கரப் பொலிவும், நேர்த்தி மெய்யழகு மிருபதகமலம் நிலமகளேந்திட நடந்தே. ருக.

முன்னநின்றெந்த நகரமீங்குறையு முறைமையேதென முனிவரர்சூழ், நன்னிலமெனது நகர்மகவில்லா னுயினேன் வடமலை யமர்ந்து, பொன்னிலமாதர் திருவடிவருடிப் போற்றவீற்றிருக்கும் முதல்வன், தன்னடிவணங்கிச் செல்லுவானிங்கு தங்கினேனென்றது கேளா. ருஉ.

வருமறையவனுய்த் திருவுருக்கொண்டோன் வாடன் மின் வழிநடந்தெனது, உரைவழாதுனது நகர்செல்நின் மனையி னுதரமேவிடுமொரு புதல்வன், றரைமிசைவருநாள் தாண்டவனெனும்பேர் சாற்றெனச்சாற்றி யந்தணனுந், திருவுருமறைந்தா னவையுணர் மறையோன் றிடுக்கென வெழுந்துளந்தெளிந்தே. ருங.

கருணையங்கடலோ னருளென வடங்காக் களிப்பில் பேரு வகையின் மூழ்கி, உரையெலாந்தனது மனையவட்குணர்த்தி யுற்றனன்றன்னக ரதனில், வரதனன்றுரைத்த வாசகப் படியே மனையவள் வயிற்றினிற் கருப்பம், மருவலும்வளைக் காப் பைந்தினுமேழா மதியில்சீமந்தமு மாற்றி. ருச.

கருப்பமென்மேலும் வளர்வுறக்கொங்கை கருநிறங் கொண்டது நுசுப்புப், பெருத்துடல்வெழுத்து நடைதளர்ந் ததிக பெருமுயிற்பெரிந்து கொட்டாவி, உரக்கமுற்றிருப்ப வெழுந்திடவருந்தி யுணவினில் வெறுப்படைந் தினைய, வருத்தமுற்றாறைம் பதுதினஞ்சென்று மகவினையீன்றனள் மாதோ. ௫௫.

ஈன்றதாய்தந்தை யிலக்குமிநாரா யணனருட்கிருபையா லிணையில், மான்றவாத்திமர்தங் குலமுங்கோத்திரமும் வம் மிஷமரபுளோ ரெவருந், தோன்றும்நாளன்றே சூழ்வினை யாவுந் துளெழத் துரக்கமெய் திடவும், வான்றவமண்மேல் வளரவுமகவாய் வந்தவதரித்தன னன்றே. ௫௬.

பெற்றதாய்தந்தை பெருந்துய ரொழிந்து பெருகுநஞ் சுற்றமுங் குலமும், மற்றவர்மனத்தின் வல்லிருளகற்ற வந் தெழும்வளர்மதிக் கொழுந்தே, நற்றிருவணையான் பேரருட் கடலி னடுவெழுஞாயிறே நாங்கள், பெற்றருஞ்செல்வப் பெருக்கமேயென்னப் பெருங்களிப்படைந்து புல்லினரால். ௫௭.

இத்திறமடங்கா மகிழ்வொடுமறையோ னிறையுரை மறைச்சடங் கியற்றிப், புத்திரன்றனக்குச் சாதகநாமம் புனைந்தனன் றாண்டவனென்னச், சித்திரம்போல நாளொரு மேனிப் பொழுதொருவண்ணமாய்ச் சிறந்தே, தத்தைவாய் மொழியார் மதலைமென்மொழியாற் றாங்கிட முலையுண்டு வளர்நாள். ௫௮.

இட்டதன்மகவை எடுத்துநீராட்டி யிருநிலக்காப்பணிந் தியங்குந், தொட்டிலிற்பட்டா டையினிடைகிடத்திச் சுடர் விளக் கசைதல்கண் டதனை, எட்டியிங்கிட்டு நகைத்திரு பதத்தா லிருநிலமுதைந் துதைந் துந்திக், கொட்டிருகரத் தாற் காற்பெரு விரலைக் கோட்டிவாய் வைத்தமு தருந்தும். ௫௯.

மங்கையரெடுத்து மார்புறத்தழுவி மணிப்பொன்னே யென்னமுத்திட்டு, செங்கரங்கொடுகென் னந்தழீஇத்தமது செவிமருங் கிருகரம் நெறித்துப், பங்கயக்கண்ணே றுறு மெனவதற்குப் பகர்பரிகாரம தியற்றித், திங்களோராறில் விதிவழியன்னப் பிராசனகன்மமுஞ் செய்தார். சுo.

உண்டுபாயலின்மீ தொருக்களித்திடும்பி னுடனுடன் புறண்டுகுப் புரிக்கும், கண்டுயின் றிடுங்கா னரிமிரட்டதனுற் கண்விழித் தழுமிரு காமும், மண்டிசேர் முழந்தா ளூன்றி யூசாடி மாவியூர்ந் திருந்தெழுந் திருதாள்க், கொண்டுதத் தடியிட் டடனடந்தோடிக் குழூச்சிறு ருறவுகொண் டாடும். சுக.

காய்ச்சிய பால்நெய் தயிரமுதெடுத்துக் கண்டவாறுண்டு மெய்பூசி, ஆச்சிபாற்சென்று யிருபதங்கொட்டி யம்மவென் றழுது கண்பிசைந்து, பாச்சிதாசோச்சி பப்புபோடென் னும் பன்மொழிமதலைவாய் கழறும், வாய்ச்சொல்கேட் டன்னை தந்தையரடங்கா மகிழ்வெனும் பெருங்கடல் வதிந் தார். சுஉ.

பாலினோர்முத்துக் கடுக்கன்மேன்முருகும் பன்மணிப் பூணணி மார்பும், ஏலகைக்காப்புக் கொலிசுமோதிரமு மிடையினிற் கிண்கிணி யரைஞாண், காலிடுந்தண்டைச் சிலம்புபாடகமுங் கலகலவெனவிளை யாடும், பாலனுய்த் திரிந்து பருவமைந்தாண்டிற் பலகலைபயின் றிடும் நாளில். சுங.

மானிலத்தமைத்த பொருளினைமறந்தோன் மனநினைவுற் றெடுப் பதுபோல், தானினையாம லிருந்துமுன்னுட்செய் தவப்பயனுதவல்போ லமரர், வானுறையமுதம் வாய்த்த போற்பகவன் மாவருளென்னுமஞ் சனத்தால், ஏனைநூ லருத்தமென்னும்வைப் புளக்கண் ணெதிர்வுறத் தோன்றிய தாமால், சுச.

உத்தமகுணமு மருள்வழியன்பு முருக்கொடுவளருநா டந்தை, தத்தம ரபினுக் குரியநான் மறையின் சடங்கின் முன்னூல் புனைந்தனனால், நித்தியசந்தி வந்தனைக்கடனன் னியமமை மித்திய முடித்து, உத்தம வேதாத் யயனநன் னெறியி னொழுகிடா தொழுகிடும் நாளில். ௬௫.

பாவமா நெறியிற் பயமுமெஞ்ஞான பகவனற்பத்தியு மிருந்து, சீவகாருணிய முதலவாங்குணத்திற் சிறந்துமூ வைம்பரு வத்தில், மேவரும்வீட்டு நெறியினுலெவர்க்கும் வியப்புமன்பச்சமு மேவ, தாவிலாஞான சாதனமுதிர்வாற் றக்கபக்குவநிறை காலை. ௬௬.

மண்ணீர்தீவளிவான் வகையெனும்பூத வையகவருமிட மெவிடம், எண்ணிலாவுயிரைப் படைத்ததாரியாமா ரெங்கு நின்றிவணடைந் தனமேல், நண்ணுவதெவணன் றீங்கிரு வினைக்கு நரகமுஞ் சுவர்க்கமு மாகப்; பண்ணியும்வேதா கமம்பகர்ந்ததுமிப் பான்மையிலொன்றுநா னறியேன். ௬௭.

இன்னிலையெவரா லுணரலாமவரை யெவாறிவிப்பவ ரவரைச், சன்னிதிப்படுநா ளெந்தநாளெனது சரீரமோர் கணமுமோ நிலையன், றென்னவெந்தழலின் மெழுகென வுருகு மிவனிதையத்தொளித் தொளிரும், நின்மலசச்சி தானந்தவுருவாம் நித்தியபூரணமெதோ வதுவே. ௬௮.

வானினீரால வடிவுறத்திரண்ட வாறெனமன்னுயி ரனைத் துந், தானிருந்தருளும் பூரணநிறைவிற் சற்றினுங்குறைவுறு திருந்தும், ஞானபூரணநா ரணகுருவென்னு நாமமுற் றெதிருறக் கண்டு, தானெனன்மறந்து தாணிவேறற்ற தருவெனத்தன்னடி பணியா. ௬௯.

சற்குருவருளாற் கரங்கொடுதாங்கி சாஸ்வதமானபேரின்ப, நற்கதியடையக் கடவையென்றருள நல்லடியவர்குடியிருக்கும், பொற்கமலத்தின் போதடிக்கெனத்தன் பொருளுடலாவியுங் கொடுத்து, எற்கருள்புரிக வென்றுளமுருகியிருகணீர்வார நின்றிரந்தே. ௭௰.

பத்தியாற்செய்யும் பணிவிடையாவும் பரமசற்குருவுளமுவப்ப, நித்தலுஞ்செய்யு மாதரவதனை னினைவினுங் கனவினு மறவாப், புத்திகொண்டதனா லெழுவகைப்பிறப்பாம் புணரியைக்கடந்து பேரின்ப, முத்தியாங்கரையைச் சேருதற்கான முதிர்ச்சியாங்காலம துணர்ந்தே. ௭௧.

நாரணப்பெயர்கொண் டந்தணகுரவ னவிலுநல் லுயிரினும்விளங்கிக், காரணகாரி யங்களுந்தனது கற்பனையன்றி வேறில்லாப், பூரணப்பொருளே பொருளதுகுரவன் புகல்வடிவன்றி யின்றென்னுந், தாரணைநீங்கே னின்னுளத்தென்னச் சற்குருமெய்ப்பொரு ளுணர்த்த. ௭௨.

உத்தமகுருவி னுரைப்படிநெடுநா ளுண்முகமாகிநின்றொளிருந், தத்துவமனைத்துந் தனையறியாத சடவடிவாகுமெய்யறிவாந், தத்துவமனைத்துந் தானறிந்தறிவாந் தனையறிவிக்கவந் தெழுந்த, தத்துவாதீத மானசற்குருவின்றன்னுருவென்ன மெய்யுணர்ந்தே. ௭௩.

தானதுவதுநா னென்னும்பாவனையாற் சமாதியுற்றம்மனநழுவி, வானினுநொய்தாய் வடிவிலாவடிவாய் வாக்மனோவகோசரப் பிரண, மோனகாரணமாய் முடிவறுசிவமாய் முத்தியாய் மூவர்களுறையுந், தானதற்பதமாய் ஞானபூரணமாய்த் தனைவிழுங்கியபொரு ளென்றே. ௭௪.

உணர்ந்தமெஞ்ஞான நிஷ்டையின்றெளிவா லுளத்திலானந்தமூற் றெடுத்து, கணந்தனி லனந்த வற்புத சாட்சாத்காரமாம் பேரலை கொழித்துக், குணங்கரை பரிய மோதி மேற்பொங்கிக் குறைவறுபெருக்கினா னிறைந்து, இணங்கு நற்றரங்க வாரிபோற்றேங்கி யிணையறுமனுபவ முதிர்ந்த. ௭௫.

அனுபவானந்த முதிர்வினாலெவையு மன்னிய மனனிய மின்றித், தனுகரணாதி யின்புருவதனிற் சராசரசித்திரந் தனது, மனமெனும் படத்தில் வதிந்ததாய்த்தோன்றிவ் வாழ்வுமுன் பில்லை பின்புள்ள, வெனுநினைவகன்று துரிய வதீதத் தின்பசாகரவடி வானான். ௭௬.

இன்பசாகரத்தி லிணையிலானிருப்ப விவ்வுலகெழுவகைப் பிறப்பிற், றுன்புறல்நோக்கி யவர்படும்பாட்டால் துணுக்க முற் றுளஞ்சகிக்காது, என்புநெக்குருகுங் கவலையுற்றிரங்கி யிவர்களீடேறுமா றெவனென், றன்புமீக்கொண்டு செய் வகையொன்று மறிகிலா தகத்தினுட் டேர்வான். ௭௭.

திருமகள்கொழுநன் றேசிகபெருமான் றிருவுளங் கனிந்துநான்முகனுக், கருள்செயவசிஷ்டன் சத்திநற்பராச னவன்வியாசன்சுகர்க் கருளிப், பரவியமுன்னூல் பண்டிதற் கல்லால் பாலருக்கடாதென் றெண்ணி, கருணையாலெவர்க் குங் காரணகுருநம் கமலநாரணன் றனையிறைஞ்சி. ௭௮.

அன்றுளோர்சித்தி யறமொடுதிறமு மாயுளுமருந்தவ வலியும், இன்றுளோரிழிவு மெண்ணிவேறெண்ணா தேசக நாயகன்றனை நோக்கிக், கன்றுபோற்கதறி யயர்ந்ததாண்ட வன்றன் கனவினிற்கருமுகி னீலக், குன்றுபோலெழுந்து குறையெலாமகற்றிக் கோயிலாயவனுளத் திருந்தே. ௭௯.

தானுரைசெய்யத் தாண்டவன்வினவச் சங்கையுத்தர
சமா தான, மானவின்றிமைப்பில் மயக்கறவுணர்த்தி மன
வயர்வகற்றலுந் தெளிந்து, ஊனுடற்குயிரா யுளனகம்புறமு
முறைபவனென்பது தோன்ற, தானனவினிற்சா தித்தல்
போற் கனவிற் சாற்றினனென்றக மகிழ்ந்தே. ௮௰.

ஞானவாரிதியுந் தானுமாய்நவின்ற நலமெலாநன்மனத்
தோர்ந்து, தானருந்தமிழாற் பாசுரமாகச் சாற்றினன் சாற்
றியவனைத்துந், தேனறும்பாகுஞ் சருக்கரைகண்டுஞ் சீனி
முக்கனிதேவா முதென, ஞானகைவல்ய நவநீதமென்னு
நாமனூலொன்றமைத் தனனால். ௮௧.

தாண்டவமூர்த்தி யுரைத்தகைவல்யந் தனைக்குருவரு
ளினா லடைந்தோர், மாண்டுலகத்துற் பவித்திடுஞ்செயலை
மாற்றிவீடடைவரா தலினும், ஆண்டுவீண்கழியி லரியமானி
டவா கத்தினாலடையுமிப் பேற்றை, யாண்டுயாம்பெறுவோ
மிக்குருவருணூற் கன்பராமவர்பெரும் பேறே. ௮௨.

இத்தகைக்கைவல் லியநவநீத மெழுதினோர் படித்து
ளோர் கேட்போர், பத்தியாற்பூசை செய்குவோர் தினம்பா
ராயணம்பண்ணுவோர் குருவால், அத்தியந் தவிசு வாச
மாய்ச்சிரவ ணாதிகத்தால்வரும் பேறும், பெத்தமுத்திக
ளாம் பேதமதகன்றோர் பெருமையைப்பெற்று வாழுவ
ரால். ௮௩.

அருமறைப்பொருளா யமைந்தகைவல்ய மன்றிமற்றொன்
றையு நாடேன், கருணைநாரணனென் றெய்வமேயல்லாற்
கனவிலும்வேறொன்றைக் கருதேன், இருவகைவினையா
லேதுவந்துறினு மிசைந்திடேன் சச்சிதானந்தப், பரம
ஞானிகள்தன் னடியவர்க்கடியாய்ப் பரவுவேன் பாதபங்க
யமே. ௮௪.

இருநூற்றுத் தொண்ணூர்மூன்றோ டிசைத்தபா சுரத்தினுள்ளே, ஒருநூற்று யெட்டாற்றத்துவ மொருப்பட விளக்கிப் பின்னைத், தருநூற்று யெண்பத்தைந்தாற் சந்தேகந்தெளிவித் தாண்ட, குருமூர்த்தி தாண்டவேசக் குருசில்நா ரணன்றாள் போற்றி. அறு.

சற்குருவே தெய்வம் சாற்றுமுறையே வேதம்
பொற்கமலபாதம் பொருந்துமிடம்-எற்கவன்றன்
மெய்யடியா ரூழியமே மிக்கபெருஞ் செல்வ மருள்
ஐயனுக்கென் கைமாற தாம். அசு.

தாண்டவமூர்த்தி சுவாமிகள் திருவவதாரவைபவம்
முற்றிற்று.

முற்றிற்று.

" முத்தமிழ்ப்பண்ணை "
வைரி செட்டிப்பாளையம்-621012,
திருச்சி மாவட்டம்.